සියලු ම හිමිකම් ඇවිරිණි.
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education - Western Province

දෙවන වාර ඇගැයීම
இரண்டாம் தவணை மதிப்பீடு - 2018
Second Term Evaluation

| ශ්‍රේණිය / தரம் / Grade | 07 | විෂය / பாடம் / Subject | இஸ்லாம் | පත්‍රය / வினாத்தாள் / Paper | I,II | පැය / மணித்தியாலம் / Hours | 2 |
|---|---|---|---|---|---|---|---|

## பகுதி - I

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**(01) மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. ‘‘ஈமான்’’ என்பதன் பொருள்,

    1. வணக்கம் 2. நம்பிக்கை 3. நடத்தை

2. மலக்குகளின் தலைவர்,

    1. மாலிக் அலைஹிஸ்ஸலாம்
    2. ரிழ்வான் அலைஹிஸ்ஸலாம்
    3. ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம்

3. கடுமையான நஜீஸ் எனக் கருதப்படுவது,

    1. உண்பதற்குத் தடுக்கப்பட்ட மிருகங்களின் பால்
    2. தாய்ப் பாலை மாத்திரம் அருந்தக்கூடிய இரண்டு வயதிற்குட்பட்ட ஆண் பிள்ளையின் சிறுநீர்
    3. நாய், பன்றி போன்றவற்றின் மலம்

4. மறுமை நாளில் முதன் முதலாக விசாரிக்கப்படும் அமல்,

    1. தொழுகை 2. ஈமான் 3. நோன்பு

5. அல்குர்ஆன் இறக்கப்பட்ட இரவு அழைக்கப்படுவது,

    1. லைலத்துல் கத்ர் இரவு 2. ஜூம்ஆ இரவு 3. மிஹ்ராஜ் இரவு

6. தயம்மும் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற உறுப்புக்கள்,

    1. இரு கைகளும் முகமும் 2. இரு கைகளும் தலையும் 3. தலை, முகம்

7. சுத்தமாக இருப்பதன் மூலம் கிடைக்கப்பெறுகின்ற பயன்,

    1. பல்வேறு நோய்க் காரணிகளுக்கு உள்ளாகுதல்.
    2. சுத்தம் ஈமானின் பாதியாகும்.
    3. இஸ்லாம் சுத்தத்திற்கு முக்கியத்துவத்தை வழங்குவதில்லை.



kalvi.lk

8. சுன்னா என்ற கருத்தைத் தரும் மற்றுமொரு சொல்,

   1. அல்குர்ஆன்
   2. ஹதீஸ்
   3. சட்ட மூலாதாரம்

9. இஸ்லாமிய வருடம் கணக்கெடுக்கப்படுவது எந்த நிகழ்விலிருந்து,

   1. மஸ்ஜிதுன் நபவி கட்டப்படல்.
   2. ஹிஜ்ரத் நிகழ்தல்.
   3. 'தௌர்' குகையில் தங்குதல்.

10. மதீனாவின் பழைய பெயர்,

   1. மக்கா  2. மதீனா  3. யத்ரிப்

(10x2=20 புள்ளிகள்)

## பகுதி – II

(01) 1. நம்பிக்கை காரணமாகத் தவிர்ந்து கொள்ளும் செயல்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

2. அல்லாஹ்விடம் காணப்படும் குணங்கள் **06க்** குறிப்பிடுக.

3. அல்லாஹ்வைப் பற்றி **ஐந்து** விடயங்களைக் குறிப்பிடுக.

(02) 1. நஜீஸ் எத்தனை வகைப்படும்?

2. கடுமையான நஜீஸ் எனக் கருதப்படுவது யாது?

3. இலகுவான நஜீஸைச் சுத்தப்படுத்தும் முறை யாது?

(03) 1. சுத்தமாக இருப்பதன் மூலம் கிடைக்கும் பயன்கள் **03ஐ** எழுதுக.

2. பெருந்தொடக்கு ஏற்பட்டால் தவிர்ந்து கொள்ள வேண்டிய விடயங்கள் **மூன்று** எழுதுக.

3. குளிக்கும் முறையைச் சுருக்கமாக எழுதுக.

(04) 1. சுன்னத்தான நோன்புகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

2. ரமழானில் செய்யக்கூடிய முக்கியமான இபாதத்கள் **நான்கைக்** குறிப்பிடுக.

3. தொழுகையின் மூலம் கிடைக்கும் பயன்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

(05) 1. சமூகத்தால் பராமரிக்கப்பட வேண்டிய நலிவுற்றோரின் **நான்கு வகையினரைக்** குறிப்பிடுக.

2. நல்ல நண்பனுக்கு உதாரணங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

3. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஸ்லிம் சமூகத்தை உடலின் உறுப்புகளுக்கு உவமித்திருந்தமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக.



kalvi.lk

(06) 1. பொது இடங்களிலிருந்து கண்டெடுக்கப்படும் பொருட்களை என்ன செய்ய வேண்டும்?

2. பிறரின் பொருட்களை அனுமதியின்றி பயன்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய விபரீதங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.

3. பிறரின் வீட்டுக்கு நுழைவதற்கு முன்னால் நாம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை ஒழுங்குமுறையாகத் தருக.

(07) 1. அல்குர்ஆன் - சுன்னா இடையே காணப்படும் தொடர்புகள் **மூன்றைக்** குறிப்பிடுக.

2. ஸுன்னாவைப் பின்பற்றுவதை வலியுறுத்தும் அல்குர்ஆன் வசனம் யாது?

3. ஸுன்னா மீதான எமது கடமைகள் யாவை?

(08) 1. ‘முஹாஜிர்’, ‘அன்ஸாரி’ என்பவர்கள் யாவர்?

2. மக்காவாசிகளுடன் மதீனாவாசிகள் நடந்து கொண்ட முறை பற்றி விபரிக்குக.

3. மஸ்ஜித் ஒன்றின் மூலம் எந்தளவு சமூகத்திற்கு சேவை செய்ய முடியுமென்பதைக் குறிப்பிடுக.

(10x8 = 80 புள்ளிகள்)

***

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

# ONLINE CLASSES

## TAMIL AND ENGLISH MEDIUMS

அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்....

**GRADE 7**

திறமை வாய்ந்த ஆசிரியர்களினூடான சிறந்த வழிகாட்டலுடன் கூடிய வினைத்திறன் மிக்க நிகழ்நிலை வகுப்புகள்.

**FREE ADMISSION**

**075 287 1457**

| | | |
|---|---|---|
| தமிழ் | வரலாறு | சுகாதாரம் |
| விஞ்ஞானம் | English | புவியியல் |
| கணிதம் | ICT | குடியியல் |

- **Spoken English Classes.**
- **Sinhala Reading and Writing Classes.**
- **Map Marking Classes**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும். (தனிப்பாட அனுமதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்)



கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page